IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AMBASAMUDRAM.

Case No. OS.191/2019

Deposition of witness for PW2

Name : திரு.குமார்

Husband / Father's Name:

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 02.03.2023 முதல் விசாரணை - நான் தற்போது விக்கிரமசிங்கபுரம் - 1 கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள விக்கிரமசிங்கபுரம், நகராட்சி, நத்தம் பழைய சர்வே எண்.377, புதிய சர்வே எண்.339/15 பொறுத்து நத்தம் நிலவரிதிட்ட துாய அடங்கல் பதிவேடு, சிட்டா மற்றும் புல வரைபட பதிவேடு ஆகிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.339/15 அடங்கல் கணக்கு ஆனது தற்போது அ.ராஜம்மாள் பெயரில் பதிவாகியுள்ளது. அதன் அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1.** மேற்படி புல எண்ணை பொறுத்த சிட்டா தற்போது அருணாச்சலம் பிள்ளை மனைவி ராஜம்மாள் பெயரில் பதிவாகியுள்ளது. அதன் அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.2.** மேற்படி சர்வே எண்.339 யைபொறுத்த புல வரைபடத்தின் அசலுடன் ஒப்பிடப்பட்ட உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3.** அடங்கலிலும், சிட்டாவிலும் நாளது தேதி வரை அ.ராஜம்மாள் பெயரில்தான் பதிவு இருந்து வருகிறது. வேறு யார் பெயரிலும் மாற்றம் செய்யப்படவில்லை. அப்புல எண்ணை பொறுத்து வேறு ஏதும் பதிவு ஆவணங்கள் இருந்தால் அதன்படி வருவாய்துறை ஆவணங்களில் பதிவு கள் மாற்றப்படும். நாளது தேதிவரை யாதொரு பதிவு ஆவணங்களும் இல்லாததால் மேற்படி வருவாய்துறை

ஆவணங்களில் ராஜம்மாள் பெயரில் பதிவு உள்ளது என்று சொன்னால் பதிவு ஆவணங்கள் உள்ளதா அல்லது இல்லையா என்று என்னால் சொல்லமுடியாது. அவ்வாறு பதிவு ஆவணம் சமர்பிக்கப்பட்டிருந்தால் யார் பெயர் உள்ளதோ அவர் பெயரில் வருவாய்துறையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கும்.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

புல எண்.339/15 க்கு பழைய புல எண் என்னவென்றால் 339/பா ஆகும். புல எண்.339/15 க்கு பழைய புல எண்.377 என்று சொன்னால் அது தவறாகும். புல எண்.339/15 ன் மொத்த பரப்பளவு 38 ச.மீ ஆகும். சென்ட் கணக்கில் ஒரு சென்ட்க்கும் குறைவாக உள்ளது. 40.5 ச.மீ. = 1 சென்ட் ஆகும். புல எண்.339/15 ல் கட்டிடங்கள் ஏதும் உள்ளதா என்றால் கிராம கணக்கின்படி அப்புல எண்ணில் மட்டப்பாபோட்டவீடு உள்ளது எனவும், அதன் கதவு எண்.4/42 என்றும் பதிவாகியுள்ளது. மேற்படி புல எண்ணை பொறுத்த புல வரைபடத்தில் (சா.சா.ஆ.3) 339/15 க்கு வடபுறம் 339/8 தெரு என பதிவாகியுள்ளது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

/உண்மை நகல்/

(ஒம்) கே.செந்தில்குமார்,

சார்பு நீதிபதி, அம்பாசமுத்திரம்.